# பட்டாலவிக்கும், சக்டாலவிக்கும் இடையில் நடைபெற்ற விவாதம்

# ஓர் ஆய்வு

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி

# பட்டாலவிக்கும், சக்டாலவிக்கும் இடையில் நடைபெற்ற விவாதம் - ஓர் ஆய்வு

*(திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் சரியான தகுதியும் அந்தஸ்தும்)*


ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி



வெளியிடுவோர்

நஸாரத் நஷ்ரோ இஷாஅத்

காதியான், பஞ்சாப்

Tamil Translation of the book

# REVIEW BAR MUBAHISA BATALAVI WA CHAKDALAVI

# பட்டாலவிக்கும், சக்டாலவிக்கும் இடையில் நடைபெற்ற விவாதம் - ஓர் ஆய்வு


Author : Hazrat Mirza Ghulam Ahmad[as]
Promised Messiah and Mahdi

Translated by : Muallim M.Nijamudeen

Composed by : Maulavi A.P.A. Thariq Ahamed

Book set by : Maulavi Athaul Mugnee

First edition : 2023


Copies : 500

Publisher : Nazarat Nashr-o-Isha'at, Qadian,
Gurdaspur Dist - 143516, Punjab

Printed at : Fazl-e-Umar Printing Press
Qadian - 143516


**Noorul Islam Toll Free No:** 1800 103 2131

**Tamil Toll Free No:** 1800 425 40000



**ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)**

வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

## நூலாசிரியரைப் பற்றி

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1835 ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார்கள். தமது சிறு வயதிலிருந்தே இறை வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், திருக்குர்ஆன் மற்றும் பிற மத வேதங்களைக் கற்பதிலும் அன்னார் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அனைத்து திசைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும் இஸ்லாத்தின் பரிதாப நிலையைக் கண்டு, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் போதனைகளைத் தூய, பரிசுத்த வடிவில் வழங்குவதற்காகவும், அன்னார் தொண்ணூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக்கணக்கான கடிதங்களையும் எழுதியதுடன், ஏராளமான மார்க்க விவாதங்களிலும் பங்கேற்றார்கள். நல்லொழுக்க, ஆன்மீக பரிபூரணத் தன்மையை அடையும் பொருட்டு, மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது என அன்னார் வாதித்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு, இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் புறமிருந்து கனவுகள், ஆன்மீகக் காட்சிகள், வெளிப்பாடுகள், முன்னறிவிப்புகள் வரத் தொடங்கின. 1889 -ல் இறை கட்டளையின்படி அன்னார் பைஅத் வாங்கத்

தொடங்கினார்கள். ஒரு தூய ஜமாஅத்திற்கான அடித்தளமிட்டார்கள். பின்னர் இறை வெளிப்பாடுகள் அதிகமாக வரத் துவங்கின. மேலும், பல்வேறு மார்க்கங்களில், வெவ்வேறு பெயர்களில் முன்னறிவிக்கப்பட்ட இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என்று இறைக் கட்டளைக்கு இணங்க அன்னார் அறிவித்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி தாமே என்றும் அன்னார் வாதித்தார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தற்போது இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

**1908** ஆம் ஆண்டில் அன்னாரது மறைவுக்குப் பின்னர், திருக்குர்ஆன், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க அன்னாரின் இயக்கத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, கிலாஃபத் அமைப்பு (கலீஃபாவை நியமித்தல்) நிறுவப்பட்டது. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாகவும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவராகவும் இருந்து வருகின்றார்கள்.

## பதிப்புரை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய 'ரிவ்யூ பர் முபாஹிஸா பட்டாலவி வ சக்டாலவி' (பட்டாலவிக்கும், சக்டாலவிக்கும் இடையில் நடைபெற்ற விவாதம் - ஓர் ஆய்வு) என்ற நூலை மதிப்பிற்குரிய முஅல்லிம் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி N. ஸியாவுல் ஹக் சாஹிப் அவர்களும், மவ்லவி M. ஷஹாபுத்தீன் சாஹிப் அவர்களும், மவ்லவி அத்தாவுல் முஃக்னீ சாஹிப் அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள்.

அவ்வாறே, தமிழ் ரிவ்யூ கமிட்டி தலைவர் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்களும், மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது சாஹிப் அவர்களும் இந்த நூலின் தமிழாக்கத்தை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்

**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**

நாஸிர் நஷ்ரோ இஷாஅத்

காதியான்

## முன்னுரை

நவம்பர் 1902 ல், முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிபுக்கும், அப்துல்லாஹ் சக்டாலவி சாஹிபுக்கும் இடையே திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸின் முக்கியத்துவம் மற்றும் அந்தஸ்து குறித்து ஒரு விவாதம் நடந்தது. இஸ்லாத்தின் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப், இஸ்லாத்தில் நீதிநெறி தீர்ப்பதில் முழுமையான, முடிவான அதிகாரம், ஹஸ்ரத் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள் நவின்ற ஹதீஸ்களுக்குத்தான் உண்டு என்றும், திருக்குர்ஆனுக்கும் கூட நபிமொழிகளின் ஒளியிலேயே பொருள் கொள்ள வேண்டும் என்றும் விவாதித்தார். மறுபக்கத்தில், இஸ்லாத்தின் அஹ்லே குர்ஆனைப் பின்பற்றும் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப், ஹதீஸ் என்பது நம்பகத் தன்மையற்ற, உண்மை தன்மையற்ற, சந்தேகம் நிறைந்த, எவ்வித பிரயோஜனமும் அற்ற வெறும் அறிவிப்புகளின் குவியலே தவிர வேறில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார். மேலும், இறைவனது மாற்ற முடியாத வார்த்தைகளாக இருக்கக்கூடிய திருக்குர்ஆன் மட்டுமே இஸ்லாமிய வழிகாட்டுதலின் உண்மையான ஆதாரம் என்றும், ஹதீஸ்கள் அனைத்தும் நிராகரிப்பதற்குத் தகுதியானவை என்றும் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் தனது கருத்தை முன்வைத்தார். இரண்டு மவ்லவிகளும் முற்றிலும் வேறுபட்ட, இரு தூரப்பட்ட தத்தமது

கருத்துக்களுக்கு சாதகமாக மிகக் கடுமையாக வாதித்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தியும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனருமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள், இவ்விரு புறம்பான, பிழையான கருத்துக்களுக்கு மிகக் கட்சிதமான, விளக்கமான ஆய்வுக் கட்டுரை ஒன்றை எழுதினார்கள். அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்ட ஓர் இறைத்தூதர் என்ற நிலையில் இப்பிரச்சனைகள் குறித்து மிகவும் அறிவுப்பூர்வமாகவும், பகுத்தறிவு ரீதியாகவும் தமது கண்ணோட்டத்தை சொற்செறிவுடன் வழங்கினார்கள். இந்த ஒப்பாய்வில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆன், சுன்னத் ஆகியவை நிச்சயமாக ஹதீஸுக்கு மேலாக வைக்கப்பட வேண்டியவை என்பதை விரிவாக விளக்கிக் கூறினார்கள். இவ்விரண்டு வழிகாட்டு ஆதார மூலங்களிலிருந்தும் முரண்பட்டு காணப்படுகின்ற அறிவிப்புகள், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது வார்த்தைகளாகக் கருதப்படுவதற்கு அறவே வாய்ப்பில்லை என்றும், அதேசமயம், நபிமொழிகள் மேற் சொன்ன இவ்விரண்டு ஆதாரமூலங்களுடன் முரண்படவில்லை எனில் அவை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அன்னார் எடுத்துரைத்தார்கள்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

## மவ்லவி அபூ சயீத் முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவிக்கும், மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் சக்டாலவிக்கும் இடையில் நடைபெற்ற விவாதத்தில் இறைவனின் நீதி நெறி தீர்ப்பாளராகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆய்வும், அன்னார் தமது ஜமாஅத்திற்கு செய்த அறிவுரையும்

குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் விவாதம் நடந்ததற்கான காரணத்தை இரு தரப்பினரின் எழுத்துகளிலிருந்து அறிய முடிகிறது. அதாவது, மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் நபிமொழிகளை வீணானவையாகக் கருதுகிறார். அவருடைய நாவிலிருந்து எவ்வாறான சொற்கள் வெளிப்படுகின்றன என்றால், அவற்றைப் பதிவு செய்வது கூட ஒழுக்கத்திற்கு மாற்றமானதாகும்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவருக்கு எதிராக எத்தகைய சான்றுகளை எடுத்து வைத்துள்ளார் என்றால், ஹதீஸ்கள் இவ்வாறே தேவை இல்லாதவையாக, வீணானவையாக, நம்பத்தகாதவையாக இருக்கின்றன எனில், அதனால் வணக்க வழிபாடுகள் மற்றும் மார்க்கச் சட்ட விவகாரங்களில் பெரும் பகுதி பொய்யாகி விடும்.

ஏனெனில், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள கட்டளைகளின் விவரங்களை ஹதீஸ்களின் மூலமே அறிய முடிகிறது. அதுவன்றி, திருக்குர்ஆனை மட்டுமே போதுமானதாகக் கருதினால், கடமையான ஃபஜ்ர் தொழுகை இரு ரக்அத்கள், மஃக்ரிப் தொழுகை மூன்று ரக்அத்கள், மற்ற மூன்று தொழுகைகள் நான்கு நான்கு ரக்அத்கள் ஆகும் என்பதற்குத் திருக்குர்ஆனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு என்ன ஆதாரம் உள்ளது?

இந்த ஆட்சேபனை ஒரு வலுவான கோணத்தில் இருந்தாலும், தன்னுள் ஒரு தவறைக் கொண்டிருந்ததன் காரணத்தினால், மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் இதற்குத் திருப்திகரமான எந்த பதிலும் தரவில்லை. அதில் சொல்லப்பட்ட விஷயங்கள் எழுதத் தகுதியில்லாத வீண் வார்த்தைகளேயாகும்.

இந்த ஆட்சேபனையின் விளைவாக, இறுதியில் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிபிற்கு அனைத்து இஸ்லாமிய பிரிவுகளிலும் எந்தப் பெயரும் அடையாளமும் காணப்படாத ஒரு புதிய தொழுகையை உருவாக்க வேண்டியது ஏற்பட்டது.

அவர் அதில் அத்தஹிய்யாத், தரூது, ஏனைய துஆக்கள் என, தொழுகையில் ஓதப்படுகின்றவற்றை நடுவிலிருந்து அகற்றி விட்டு, அவற்றினிடத்தில் திருக்குர்ஆன் வசனங்களையே வைத்து விட்டார். இவ்வாறே, இன்னும் நிறைய மாற்றங்களைத் தொழுகையில் செய்துள்ளார்.

அதனை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

ஹஜ், ஸக்காத் போன்ற விஷயங்களிலும் கூட மாற்றம் செய்திருக்கலாம். ஆனால், மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் புரிந்தது போன்று ஹதீஸ்கள் தேவையில்லாதவை, வீணானவை என்பது உண்மையா? நவூதுபில்லாஹ்! ஒருபோதும் இல்லை.

அசல் விஷயம் என்னவென்றால், இந்த இரு தரப்பில் ஒரு தரப்பு அளவு கடந்த கூடுதலை மேற் கொண்டுள்ளது. மற்ற பிரிவு குறைவுபடுத்தலை மேற்கொண்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை சென்றடையக்கூடிய, அறிவிப்பாளர் தொடரை உடைய ஹதீஸ்கள் தேவையில்லாதவையாகவோ, வீணானவையாகவோ கருதும் அளவுக்கு உள்ளவை ஒன்றும் அல்ல என்பதில், முதல் தரப்பைச் சார்ந்த மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் உண்மையில் இருக்கிறார் என்றாலும், அவர் தர வரிசையைப் பாதுகாக்கும் விதிகளை அலட்சியம் செய்து விட்டு, ஹதீஸ்களின் தரத்தை எவ்வளவு உயர்ந்த கோபுரத்தில் ஏற்றுகிறார் என்றால், அதனால் திருக்குர்ஆனுக்கு அவசியம் இழிவு ஏற்படுகிறது; அதை மறுக்க வேண்டி வருகிறது. மேலும், அல்லாஹ்வின் வேதத்திற்கு முரண்படுவதையும் ஆட்சேபனை ஏற்படுவதையும் அவர் சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

ஹதீஸ்களிலுள்ள சம்பவங்களுக்குத் திருக்குர்ஆனில் தெளிவாக உள்ள சம்பவங்களை

விட முன்னுரிமை தருகிறார். ஹதீஸ்களின் கூற்றுகளைத் திருக்குர்ஆனின் கூற்றுகளை விட எல்லா நிலையிலும் முன்னுரிமை வாய்ந்தவையாகக் கருதுகிறார். இது தெளிவான தவறும் நீதியின் வழியிலிருந்து விலகுதலும் ஆகும். மகத்துவமிக்க அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

فَبِاَيِّ حَدِيْثٍۭ بَعْدَ اللّٰهِ وَاٰيٰتِهٖ يُؤْمِنُوْنَ (45:7)

அதாவது, இறைவன் மற்றும் அவனது வசனங்களுக்குப் பிறகு, எந்த ஹதீஸில் அவர்கள் ஈமான் கொள்வார்கள்?

இங்கு ஹதீஸ் என்ற பொதுவான பெயர்ச்சொல், பொதுமையைக் குறிக்கிறது. இது திருக்குர்ஆனிற்கு எதிராகவும் முரணாகவும் உள்ள, எந்த இசைவான பொருளும் உருவாக முடியாத ஹதீஸை மறுத்துவிட வேண்டும் என்று தெளிவாகத் தெரிவிக்கிறது. இந்த ஹதீஸ் என்ற சொல்லில் ஒரு முன்னறிவிப்பும் உள்ளது. அது சுட்டிக் காட்டும் விதமாக இவ்வசனத்தில் உள்ளது. அது என்னவென்றால், ஒரு காலம் இந்த உம்மத்தில் வர இருக்கின்றது. அப்போது இந்த உம்மத்திலுள்ள சிலர் திருக்குர்ஆனை விட்டு விட்டு திருக்குர்ஆனின் கூற்றுக்கு எதிரான, முரணான விஷயத்தைக் கூறக்கூடிய ஹதீஸ்களின்படியும் அமல் செய்வர் என்பதை, இந்தப் புகழுக்குரிய வசனத்தில் இறைவன் சுட்டிக் காட்டுகின்றான்.

சுருக்கமாக, இந்த அஹ்லே ஹதீஸ் பிரிவினர் இவ்விஷயத்தில் மிகைப்படுத்துதலின் பக்கம் செல்கின்றனர். அதாவது, திருக்குர்ஆனின் சாட்சியத்தின் மீது ஹதீஸ்களின் கூற்றுகளை முன்னுரிமை பெற்றவை என்று கருதுகின்றனர். அவர்கள் நீதியோடும் இறை அச்சத்தோடும் செயல்பட்டிருந்தால், அத்தகைய ஹதீஸ்களுக்குத் திருக்குர்ஆனுக்கு ஏற்றவாறு பொருளைத் தந்திருக்க இயலும்.

ஆனால், அவர்கள் இறைவனது தெள்ளத் தெளிவான உறுதிவாய்ந்த சொற்களை கைவிடப்பட்டவையாகவும், ஒதுக்கப்பட்டவையாகவும் ஆக்குவதில் திருப்தி கொண்டு விட்டனர். அல்லாஹ்வின் வேதத்தின் கூற்றுகளுக்கு முரண்படுகிற ஹதீஸ்களை விட்டு விடுவதையோ அல்லது அவற்றை அல்லாஹ்வின் வேதத்துடன் பொருத்துவதிலேயோ திருப்தி கொள்ளவில்லை. மவ்லவி முஹம்மது ஹுஸைன் இந்த மிகைப்படுத்துதலின் நடைமுறையைத்தான் மேற்கொண்டுள்ளார்.

மேலும் அவரது எதிர் மவ்லவியான அப்துல்லாஹ் சாஹிப் குறைத்து கூறுவதன் பக்கம் தடம் பதித்துள்ளார். இவர் ஹதீஸ்களை முற்றிலும் மறுத்து விட்டார். ஹதீஸ்களை மறுப்பது ஒரு வகையில் திருக்குர்ஆனை மறுப்பதாகும். ஏனெனில், அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِىْ يُحْبِبْكُمُ اللّٰهُ (3:32)

ஆகவே, அல்லாஹ்வின் நேசம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலுடன் தொடர்புடையதாக இருக்கின்ற நிலையில், பின்பற்றுதல் நிலை பெற்றுள்ள அன்னாரது செயல் முன்மாதிரிகளைக் கண்டறிய ஹதீஸூம் ஒரு வழியாகும். ஆகவே, எவர் ஹதீஸை விட்டு விடுகிறாரோ அவர் பின்பற்றும் வழியையும் விட்டு விட்டார்.

எல்லா ஹதீஸ்களுமே ஐயப்பாடுகளும் யூகங்களும் கொண்ட கருவூலமாகும் என்ற மவ்லவி அப்துல்லாஹ் சாஹிபின் கூற்று, சிந்தனைக் குறைவால் உருவானது. இந்த எண்ணத்தின் அசல் வேர் ஹதீஸ் தொகுப்பாளர்களின் ஒரு தவறானதும், முழுமையற்றதுமான பங்கீடாகும். இதுவே பலரை ஏமாற வைத்துள்ளது.

ஏனெனில் அவர்கள் இவ்வாறு பங்கீடு செய்கின்றார்கள். அதாவது, நமது கையில் ஒன்று அல்லாஹ்வின் வேதமும், இரண்டாவது ஹதீஸூம் இருக்கிறது. மேலும் ஹதீஸ் அல்லாஹ்வின் வேதத்தின் மீது தீர்ப்பளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒருவகையில் ஹதீஸ்கள் காஸீ அல்லது நீதிபதி போன்று ஆசனத்தில் அமர்ந்துள்ளன. திருக்குர்ஆன் அவற்றிற்கு முன்பாக ஒரு வாதியைப் போன்று நிற்கிறது. ஹதீஸின் கட்டளைக்குக் கட்டுப்படுகிறது.

இத்தகைய பேச்சால் சந்தேகமின்றி ஒவ்வொருவருக்கும் ஏமாற்றம் ஏற்படும். ஹதீஸ்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நூறு

நூற்றி ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு தொகுக்கப்பட்டுள்ளன. அவை மனித கரங்களின் தீண்டுதல்களுக்கு அப்பாற்பட்டவையாகவும் இல்லை. இதுமட்டுமின்றி, குறைவான அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்பட்ட குவியலாகவும், யூகங்களாகவும் இருக்கின்றன. அவற்றுள் சில வகைகள் அரிதாகவும், இல்லாததற்கு சமமாகவும் உள்ளன.

பிறகு அவையே திருக்குர்ஆனின் மீது தீர்ப்பளிக்கக்கூடியவையாகவும் உள்ளன என்றால், இஸ்லாம் மார்க்கம் முழுவதுமே யூகங்களின் குவியல்தான் என்று உறுதியாகி விடும். யூகம் ஒரு பொருட்டல்ல. வெறும் யூகங்களை பற்றிப் பிடிப்பவர் உண்மையின் உயர்ந்த தரத்திலிருந்து மிகவும் கீழே வீழ்ந்துள்ளார். மேலும் அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

إِنَّ الظَّنَّ لَا يُغْنِي مِنَ الْحَقِّ شَيْئًا (10:37)

அதாவது, வெறும் யூகம் நிச்சய உறுதிக்கு முன்பு ஒன்றுமற்றதாகும்.

ஆகவே, திருக்குர்ஆன், காஸீ சாஹிப் (அதாவது ஹதீஸ்)-ன் மார்க்கத் தீர்ப்புகள் இல்லாமல் நடைமுறைப்படுத்தவே இயலாது என அப்படியே கைவிட்டு போய் விட்டது. ஒதுக்கப்பட்டதாகவும் கைவிடப்பட்டதாகவும் ஆகி விட்டது. மேலும் காஸீ சாஹிப், அதாவது, ஹதீஸ்கள் வெறும் யூகம் எனும் அழுக்கான, கறை படிந்த ஆடைகளை அணிந்துள்ளன. அதிலிருந்து பொய்யிற்கான சாத்தியத்தை எவ்வகையிலும்

அகற்ற முடியாது. ஏனெனில், யூகத்தின் வரையறையானது, அது ஏமாற்றத்தின் கலப்பின்றி இருக்காது என்பதாகும்.

ஆகவே, இந்நிலையில் திருக்குர்ஆனும் நம் கையில் இல்லை. ஹதீஸும் அதை நம்பும் அளவிற்குத் தகுதியானதாக இல்லை. ஒருவகையில், இரண்டுமே கையை விட்டு போய் விட்டது. இது தவறாகும். பெரும்பாலாரை இதுவே அழித்து விட்டது.①

நான் இந்தக் கட்டுரையை எந்த ஸிராத்தே முஸ்தகீமை (நேரான பாதையை) வெளிப்படுத்துவதற்காக எழுதினேனோ அது இதுவாகும்: **முஸ்லிம்களின் கையில் இஸ்லாமிய நேர்வழிகளில் நிலைநிற்பதற்கு மூன்று விஷயங்கள் உள்ளன.**

---

**அடிக்குறிப்பு 1.** *நான் பிரசுரத்தை எழுதி முடித்த போது, ஓரிரு வாக்கியங்களே எஞ்சியிருக்கும் என்று நினைக்கிறேன். அப்போது ஒரு கனவு என்னை ஆதிக்கம் செய்தது. எதுவரை என்றால், நான் நிர்பந்தமான சூழ்நிலையில் காகிதத்தை கையில் இருந்து விட்டு விட்டு உறங்கி விட்டேன். கனவில் மவ்லவி முஹம்மது ஹுஸைன் சாஹிப் பட்டாலவியும் மவ்லவி அப்துல்லாஹ் சாஹிப் சக்டாலவியும் என் பார்வைக்கு வந்து விட்டார்கள். நான் அவ்விருவரையும் பார்த்து இவ்வாறு கூறுகின்றேன்.*

خَسَفَ الْقَمَرُ وَالشَّمْسُ فِيْ رَمَضَانَ فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكُمَا تُكَذِّبٰنِ

*அதாவது, சந்திரனுக்கும் சூரியனுக்கும் ரமலானில் கிரகணம் பிடித்து விட்டது. எனவே இரு மனிதர்களே! இறைவனின் அருளை நீங்கள் ஏன் மறுத்துக் கொண்டு இருக்கின்றீர்கள்? பிறகு நான் கனவில் என் சகோதரர் மவ்லவி அப்துல் கரீம் சாஹிபிடம் கூறுகின்றேன்:*

(1) **திருக்குர்ஆன்.** அல்லாஹ்வுடைய வேதம். அதனை விட அதிகம் தெள்ளத் தெளிவான நிச்சய உறுதி வாய்ந்த ஒரு வேதமும் நம் கையில் இல்லை. அது இறைவனின் வார்த்தையாகும். அது சந்தேகம், யூகம் ஆகிய கலப்படங்களிலிருந்து தூய்மையானது.

(2) **சுன்னத்.** இந்த இடத்தில் நாம் அஹ்லே ஹதீஸ்களின் வழிமுறைகளிலிருந்து தனித்தவாறு கூறுகின்றோம்.

அதாவது நாம் சம்பிரதாயமான ஹதீஸ் தொகுப்பாளர்களைப் போன்று ஹதீஸையும், சுன்னத்தையும் ஒரே விஷயமாக கருதுவதில்லை. மாறாக, ஹதீஸ் தனி; சுன்னத் தனி.

சுன்னத் என்று நாம் சொல்வதன் பொருள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய செயல் நடைமுறையானது, தனக்குள் ஒரு தொடர்ச்சியும் ஆரம்பம் முதலே திருக்குர்ஆனுடனே வெளிப்பட்டதும் எப்போதும் திருக்குர்ஆனுடனே இருந்து வரப்போவதும் ஆகும்.

---

*'ஆலாயி' என்பது இந்த இடத்தில் என்னைக் குறிக்கிறது. பிறகு நான் ஒரு பெரிய அறையின் பக்கம் கண் உயர்த்தி பார்க்கின்றேன். அதில் விளக்கு எரிகிறது. இரவு நேரம் போன்று இருக்கின்றது. சிலர் விளக்கிற்கு முன் திருக்குர்ஆனைத் திறந்து, அதிலிருந்து மேற்கண்ட அதே இல்ஹாமை, திருக்குர்ஆனில் இதே வரிசைப்படி இருப்பதைப் போன்று இந்த இரண்டு வரிகளை எழுதுகிறார்கள். அதில் ஒருவர் துணிகளை செப்பனிடும் தொழிலாளியான அமிர்தசரஸைச் சார்ந்த மியான் நபி பக்ஷ் சாஹிப் ஆவார்கள் என்று நான் அடையாளம் கண்டு கொண்டேன்.*

அல்லது இதனை வேறு வார்த்தைகளில், திருக்குர்ஆன் அல்லாஹ்வுடைய சொல்லும் சுன்னத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறையும் ஆகும் என்று கூறலாம்.

மேலும் புராதன காலம் முதல் அல்லாஹ் தஆலா உடைய நடைமுறையானது, நபிமார்கள் இறைவனுடைய வார்த்தைகளை மக்களின் நேர்வழிக்காகக் கொண்டு வரும் போது தமது செயல் நடைமுறையின் மூலம் அந்தச் சொற்களுக்கான விளக்கம் அளித்து விடுகின்றார்கள். அந்தச் சொற்களை விளங்குவதில் மக்களுக்கு சந்தேகங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக அவ்வாறு செய்கின்றார்கள். மேலும் அந்தக் கூற்றின் படி தாமும் அமல் செய்கின்றார்கள். மற்றவரையும் அமல் செய்ய வைக்கின்றார்கள்.

**நேர்வழிக்கான மூன்றாவது வழிமுறை ஹதீஸாகும்.** நாம் கூறக்கூடிய ஹதீஸ் என்பதன் பொருள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு சம்பவங்களின் வடிவில், ஏறத்தாழ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 150 ஆண்டுகளுக்குப்பிறகு பல்வேறு அறிவிப்பாளர்கள் மூலமாக தொகுக்கப்பட்டவை. ஆகவே, சுன்னத்திற்கும் ஹதீஸிற்கும் இடையில் வித்தியாசம் என்னவெனில், தொடர்ச்சியான செயல்களைக் கொண்ட நடைமுறை சுன்னத் எனப்படும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரங்களால் துவக்கி

வைத்தார்கள். மேலும், நம்பிக்கை தரத்தில் இது திருக்குர்ஆனிற்கு அடுத்த தர வரிசையில் உள்ளது.

எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனைப் பரப்புவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்களோ அதே போன்று சுன்னத்தை நிலை நாட்டுவதற்காகவும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். திருக்குர்ஆன் எவ்வாறு உறுதியானதோ அதே போன்றே தொடர்ச்சியாக வழக்கத்தில் உள்ள சுன்னத்தும் உறுதியானதாகும்.

இந்த இரண்டு தொண்டுகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கரங்களால் ஆற்றினார்கள். இரண்டையும் தமது கடமையாகக் கருதினார்கள்.

உதாரணமாக, தொழுகைக்கான கட்டளை வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனின் இந்தக் கூற்றைத் தமது செயல் மூலமாகத் தெளிவாக செய்து காட்டினார்கள். ஃபஜ்ர் தொழுகைக்கு இத்தனை ரக்அத்கள், மஃக்ரிபுக்கு இத்தனை, மற்ற தொழுகைகளுக்கு இத்தனை இத்தனை ரக்அத்கள் என்று தமது செயல் மூலமாக வெளிப்படுத்திக் காட்டினார்கள். அதே போன்று ஹஜ் செய்து காட்டினார்கள். பிறகு தமது கரங்களால் ஆயிரக்கணக்கான சஹாபிகளை இதைக் கடைபிடிக்க செய்து இந்த செயல் நடைமுறையை மிக அழுத்தமாக நிலைநாட்டி விட்டார்கள். ஆகவே, இன்று வரை உம்மத்தில் இந்த செயல் முன்மாதிரி நடைமுறையில்

இருப்பதைப் பார்க்கவும், உணரவும் முடிகிறதே, இதையே சுன்னத் என்று அழைக்கிறோம்.

ஆனால், ஹதீஸை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது நேரடிப் பார்வையில் எழுத வைக்கவுமில்லை; அதைத் தொகுத்து வைப்பதற்காக எந்த ஏற்பாடும் செய்யவில்லை. சில ஹதீஸ்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொகுத்தார்கள். ஆனால் பிறகு இறையச்சத்தினைக் கருத்தில் கொண்டு, நான் நேரடியாக கேட்கவில்லை. உண்மை நிலை என்னவென்று அல்லாஹ்வே அறிவான் என்று அவர்கள் அந்த ஹதீஸ்கள் அனைத்தையும் எரித்து விட்டார்கள்.

பிறகு சஹாபிகளின் காலம் கழிந்த பின்னர், சில தபவுத் தாபியீனின் இயல்பை இறைவன் ஹதீஸ்களையும் திரட்ட வேண்டும் என்பதன் பக்கம் திருப்பி விட்டான். பிறகு தான் ஹதீஸ்கள் திரட்டப்பட்டன. ஹதீஸ்களைத் திரட்டிய பெரும்பாலார் பெரும் இறையச்சம் உடையவர்களும், பாவங்களிலிருந்து தவிர்ந்து இருந்தவர்களாகவும் இருந்தனர் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ள முடியாது.

அவர்களுக்கு சக்தி இருந்த அளவிற்கு ஹதீஸ்களை ஆய்வு செய்தார்கள். தமது கருத்தின்படி இட்டுக் கட்டப்பட்டவையாக இருக்கக்கூடிய ஹதீஸ்களிலிருந்து தவிர்ந்திருக்க விரும்பினார்கள். சந்தேகத்திற்குரிய அறிவிப்-பாளர்களான எவர்களிடமிருந்தும் ஹதீஸ்களைப் பெறவில்லை. கடுமையாக முயற்சி செய்தார்கள்.

இந்த எல்லா நடவடிக்கைகளும் காலம் கடந்து நடந்திருந்ததால் அவை அனைத்தும் யூகத்திற்கு உரியவையாகவே இருந்து விட்டன. இவ்வாறு இருந்தும், அந்த எல்லா ஹதீஸ்களும் வீணானவை, ஒன்றுக்கும் உதவாதவை, பயனற்றவை, பொய்யானவை என்று கூறுவது முற்றிலும் நீதிக்குப் புறம்பானதாகும். மாறாக, அந்த ஹதீஸ்களை எழுதுவதில் எந்த அளவுக்கு எச்சரிக்கையுடன் பணி நடைபெற்றதோ, எந்த அளவுக்கு ஆய்வுக்கும் ஆராய்ச்சிக்கும் உட்பட்டதோ அதனைப் போன்று மற்ற மார்க்கங்களில் காணக் கிடைப்பதில்லை.

யூதர்களிடம் கூட ஹதீஸ்கள் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹிற்கு எதிராகவும் கூட ஹதீஸ்களைக் கொண்டு செயல்படுபவர்கள் என்று அழைக்கப்பட்ட யூத கோத்திரமே இருந்தது. ஆனால் இஸ்லாத்தின் ஹதீஸ் தொகுப்பாளர்களைப் போன்று யூதர்களின் ஹதீஸ் தொகுப்பாளர்கள் எச்சரிக்கையாக ஹதீஸ்களைத் திரட்டியதாக எங்கும் நிரூபிக்கப்படவில்லை.

ஆயினும் ஹதீஸ்கள் திரட்டப்படும் வரை மக்கள் தொழுகைகளின் ரக்அத்துகள் பற்றி தெரியாமலோ, ஹஜ் செய்ய தெரியாமலோ இருந்தார்கள் என்று கருதினால் அது தவறாகும். ஏனெனில் செயல் நடைமுறை சுன்னத்தின் மூலமாக அவர்களிடம் உருவாகி விட்டிருந்தது. அது இஸ்லாத்தின் எல்லா வரம்புகளையும் கடமைகளையும் அவர்களுக்குக் கற்றுத்தந்து விட்டிருந்தது. எனவே, நீண்ட காலத்திற்குப் பிறகு

தொகுக்கப்பட்ட அந்த ஹதீஸ்களே உலகில் இல்லாமல் இருந்திருந்தாலும் கூட இஸ்லாத்தின் அசல் போதனைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்பது முற்றிலும் சரியான விஷயமாகும்.

ஏனெனில் திருக்குர்ஆனும் செயல் நடைமுறையும் அந்தத் தேவைகளை நிறைவேற்றி விட்டிருந்தன. இருப்பினும், ஹதீஸ்கள் அந்த ஒளியை அதிகமாக்கின. இஸ்லாம் நூருன் அலா நூர் (ஒளிக்கு மேல் ஒளி) ஆகி விட்டது. ஹதீஸ்கள் திருக்குர்ஆனிற்கும் சுன்னத்திற்கும் சாட்சியாக நின்று விட்டன. பின் நாட்களில் உருவாகி விட்ட பல இஸ்லாமிய பிரிவுகளுள் உண்மையான பிரிவுக்கு நம்பத்தகுந்த ஹதீஸ்களிலிருந்து மிகவும் பயன் கிடைத்தது.

திருக்குர்ஆனை விட ஹதீஸ்களுக்கு முன்னுரிமை வழங்கும் கொள்கையுடைய இக்கால அஹ்லே ஹதீஸ்களைப் போன்று கொள்கை வைப்பதும், ஹதீஸ்களுடைய சம்பவங்கள் திருக்குர்ஆனுக்கு எதிராக வரும்பொழுது ஹதீஸ்களின் சம்பவங்களுக்குத் திருக்குர்ஆனை விட முன்னுரிமை வழங்கி திருக்குர்ஆனை விட்டு விடுவதும், ஹதீஸ்களை மவ்லவி அப்துல்லாஹ் சக்டாலவியின் கொள்கையைப் போன்று வெறும் வீணானவையாகவோ பொய்யானவையாகவோ கருதுவதும் ஆகிய செயல்களை செய்யாமல் இருப்பதுதான் எல்லாவற்றையும் விடச் சிறந்த கொள்கையாகும்.

மாறாக, திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தை ஹதீஸ்களின் மீது நீதிபதியாகக் கருத வேண்டும்.

எந்த ஹதீஸ் திருக்குர்ஆனிற்கும் சுன்னத்திற்கும் எதிரானதாக இல்லையோ அதனை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதே ஸிராத்தே முஸ்தகீம் ஆகும். இதனைக் கடைபிடிப்பவர் அருளுக்குரியவர். இந்த விதிமுறையைக் கருதிற் கொள்ளாமல் ஹதீஸ்களை மறுப்பவர் மிகவும் பேறிழந்தவரும்[2] அறியாதவரும் ஆவார்.

திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தை எதிர்க்காத, முரண்படாத ஒரு ஹதீஸ் எத்தனை குறைந்த தரத்தை உடைய ஹதீஸாக இருப்பினும் அதன்படி செயல்பட வேண்டும்.

---

**அடிக்குறிப்பு 2.** *இன்று இரவு எனக்குக் கனவில் காட்டப்பட்டது. மிகவும் மிருதுவானதும் அழகானதும் பழங்களால் நிறைந்து தொங்கக்கூடியதுமான மரம் ஒன்று இருக்கிறது. சில கூட்டத்தினர் செயற்கையாக, மேலும் வலுக்கட்டாயமாக ஒரு படரும் கொடியை இணைக்க விரும்புகின்றனர். அதற்கு வேர் இல்லை. மாறாக, இணைக்கப்பட்டுள்ளது. அது ஒட்டுண்ணி செடியைப் போன்று இருக்கிறது.*

*அந்தக் கொடி மரத்தின் மீது சிறிது சிறிதாக படரும் பொழுது, அதன் பழங்களுக்கு சேதம் ஏற்படுத்துகின்றது. மேலும் அந்த மிருதுவான மரத்தின் வடிவத்தில் ஓர் அருவெறுப்பான, விகாரமான உருவம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த மரத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் கனிகள் வீணாகிப் போவதற்கான கடும் அபாயம் உள்ளது. இன்னும் சொல்வதாயின், சிறிது வீணாகியும் விட்டன. அப்போது அதனைப் பார்த்து எனது உள்ளம் பதற்றமடைந்து உருகி விட்டது. நல்ல தூய்மையான மனிதனின் வடிவத்தில் நின்ற ஒருவரிடம் நான், 'இது என்ன மரம்? இந்த உன்னதமான மரத்தைத் தனது பிடிக்குள் அமுக்கி வைத்துள்ள இது என்ன கொடி?' என்று கேட்டேன்.*

மனிதனால் உருவாக்கப்பட்ட ஃபிக்ஹ் (மார்க்கச் சட்டம்) மீது அதற்கு முன்னுரிமை தர வேண்டும் என்பது நமது ஜமாஅத்தின் கடமையாக இருக்க வேண்டும். ஹதீஸில் ஒரு விஷயம் கிடைக்கவில்லை, சுன்னத்திலும் கிடைக்கவில்லை, திருக்குர்ஆனிலும் பெற முடியவில்லை எனில், அந்நிலையில் ஹனஃபீ ஃபிக்ஹ்வின் படி அமல் செய்யுங்கள்.

இந்தப் பிரிவின் பெரும்பான்மை இறை விருப்பத்திற்குச் சான்று பகர்கின்றது. இக்காலத்தின் சில மாற்றங்களினால் ஹனஃபீ மார்க்கத்தீர்ப்பால் சரியான ஃபத்வா - மார்க்கத் தீர்ப்பு எதுவும் வழங்க முடியவில்லை எனில், இந்நிலையில் இந்த இயக்கத்தின் ஆலிம்கள் தமக்கு இறைவனால் வழங்கப்பட்ட திறமையைக் கொண்டு முயற்சி செய்து தீர்வு காண வேண்டும். இருப்பினும் எச்சரிக்கையாக இருங்கள்.

---

*அப்போது அவர் பதில் அளித்தவாறு இவ்வாறு கூறினார்: இந்த மரம் இறை வார்த்தை திருக்குர்ஆன் ஆகும். இந்தக் கொடி திருக்குர்ஆனுக்கு எதிராக உள்ள அல்லது எதிராக வைக்கப்படும் ஹதீஸ்களும், கூற்றுகளும் ஆகும். அவைகளின் பெரும்பான்மை இந்த மரத்தை அமுக்கி விட்டது. அதற்கு சேதம் விளைவித்துக் கொண்டிருக்கின்றது.*

*அப்பொழுது நான் கண் விழித்து விட்டேன். எனவே, இரவாக இருக்கும் இந்நேரத்தில் நான் எழுந்ததும் இக்கட்டுரையை எழுதுகின்றேன்; இப்போது எழுதி முடிக்க போகின்றேன். இது சனிக்கிழமை இரவு 12 மணிக்கு பிறகு, 2 மணிக்கு 20 நிமிடம் முன்பு உள்ள நேரமாகும். ஃபல்ஹம்துலில்லாஹ் அலா தாலிக். (நூலாசிரியர்)*

ஏனெனில், மவ்லவி அப்துல்லாஹ் சக்டாலவியைப் போன்று காரணமில்லாமல் ஹதீஸ்களை மறுக்காதீர்கள். எனினும், எங்கு திருக்குர்ஆனுக்கும் சுன்னத்திற்கும் எதிரானதாக ஒரு ஹதீஸ் இருக்கிறதோ அந்த ஹதீஸை விட்டு விடுங்கள். நினைவில் கொள்க! நமது ஜமாஅத் அப்துல்லாஹ் சக்டாலவியை விட அஹ்லே ஹதீஸிற்கு நெருக்கமானது. மேலும் அப்துல்லாஹ் சக்டாலவியின் வீணான கருத்துக்களுடன் நமக்கு எந்தத் தொடர்பும் இல்லை. நமது ஜமாஅத்தின் ஒவ்வொருவரும் ஹதீஸ்களைப் பற்றி அப்துல்லாஹ் சக்டாலவி கொண்டிருக்கும் கொள்கைகளை விட்டும் உள்ளத்தால் வெறுத்து விலக வேண்டும். முடிந்த வரை அத்தகைய மக்களுடன் பழகுவதில் வெறுப்பு கொள்ளுங்கள். மற்ற எதிரிகளுடன் ஒப்பிடும் போது (இது) அதிகம் அழிவிற்காளான பிரிவாகும்.[3]

---

**அடிக்குறிப்பு 3.** *அதே இரவில் ஓர் இல்ஹாம் வந்தது. நேரம் மூன்று மணி இரண்டு நிமிடத்திற்கும் மேலாக இருந்தது. அந்த இல்ஹாம் இதுவாகும்:*

**من اعرض عن ذکری نبتلیه بذریة فاسقة ملحدة**

**یمیلون الی الدنیا و لا یعبدوننی شیأ**

*எவர் திருக்குர்ஆனை விட்டு விலகி விடுவாரோ நாம் அவரை ஒரு தீய சந்ததியைக் கொண்டு சோதிப்போம். அவர்கள் மார்க்கமற்றவர்களாக இருப்பர். அவர்கள் உலகில் வீழ்ந்து கிடப்பர். என்னை வணங்குவதில் அவர்களுக்கு எந்தப் பங்கும் இருக்காது. அதாவது, அத்தகைய சந்ததிகளின் முடிவு தீயதாக இருக்கும். மேலும் பாவமன்னிப்பு மற்றும் இறையச்சத்திற்கான வாய்ப்பு கிடைக்காது.*

மவ்லவி முஹம்மது ஹுஸைனின் பிரிவினர் போன்று ஹதீஸ் விஷயத்தில் மிகைப்படுத்துதலின் பக்கமும் குனிந்து விடக்கூடாது. அப்துல்லாஹ் சக்டாலவியைப் போன்று குறைவுபடுத்துதலின் பக்கமும் சாய்ந்து விடக்கூடாது. மாறாக, இது தொடர்பாக நடுநிலைமையான வழியை உங்களுடைய கொள்கையாகக் கருதுங்கள். அதாவது திருக்குர்ஆன் கைவிடப்பட்டதாகவும், தூக்கி எறியப்பட்டதாகவும் ஆகிவிடும் அளவிற்கு முழுமையாக ஹதீஸ்களைத் தமது கஅபாவாகவும் கிப்லாவாகவும் ஆக்கிக் கொள்ளக் கூடாது.

மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்கள் முழுவதுமே வீணாகி விடும் அளவிற்கு ஹதீஸ்களை கைவிடப்-பட்டதாகவும் ஒதுக்கப்பட்டதாகவும் ஆக்கி விடவும் கூடாது. அதே போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தை மறுக்கவும் கூடாது. மேலும் இந்த உம்மத்தில் இறைவனுடன் உரையாடுதலின் வாசல் அடைந்து விடுவதாக கத்மே நுபுவ்வத்திற்குப் பொருள் கொள்ளக் கூடாது.

நினைவில் கொள்ளுங்கள். நமது ஈமானாவது, கடைசி வேதமும் கடைசி ஷரீஅத்தும் திருக்குர்ஆன் ஆகும் என்பதாகும். ஷரீஅத்துடைய ஒரு நபியாக வருதல் அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமலேயே வஹீயைப் பெறுதல் என்ற பொருளில் மறுமை வரை எந்த நபியும்

கிடையாது. மாறாக, மறுமை வரை இந்தக் கதவு அடைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலால் இறை வஹீயின் அருளைப் பெறுவதற்கான வாசல்கள் மறுமை வரை திறந்துள்ளன. பின்பற்றுதலின் விளைவால் இறங்கும் வஹீ ஒருபோதும் நின்று போகாது. ஆனால் ஷரீஅத்துடைய நுபுவ்வத் அல்லது நேரடியாக கிடைக்கும் (முஸ்தகில்) நுபுவ்வத்தும் முடிந்து விட்டது.

ولا سبیل الیھا الیٰ یوم القیامة ومن قال انی لست من امة محمد صلی اللہ علیه وسلم وادعی انه نبی صاحب الشریعة او من دون الشریعة ولیس من الامة فمثله کمثل رجل غمره السیل المنهمر فالقاه وراءه ولم یغادر حتیٰ مات

இதன் விளக்கமாவது, எந்த இடத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியா ஆவார்கள் என இறைவன் வாக்குறுதி அளித்துள்ளானோ அதே இடத்தில் பெருமானார் (ஸல்) தமது ஆன்மீகத்தின் அடிப்படையில் அந்த எல்லா நல்லடியார்களுக்காகவும் தந்தையாக உள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதன் மூலமாகவே அவர்கள் முழுமை அடைகிறார்கள். மேலும் இறை வஹீ மற்றும் உரையாடுதலின் சிறப்பு அவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதையும் சுட்டிக் காட்டி விட்டான். அந்த கம்பீரமிக்க இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

مَا كَانَ مُحَمَّدٌ اَبَآ اَحَدٍ مِّنْ رِّجَالِكُمْ وَلٰكِنْ رَّسُوْلَ اللّٰهِ وَخَاتَمَ

النَّبِيّٖنَ **(33:41)**

அதாவது, முஹம்மது (ஸல்) உங்களில் எந்த ஆண் மகனுக்கும் தந்தை இல்லை. ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களுக்கு முத்திரையும் ஆவார்.

லாகின் - ஆனால் என்ற பதம் அரபி மொழியில் இழப்பை சரி செய்வதற்காக வருகிறது. அதாவது இழந்ததை சரி செய்வதற்காக வருகிறது. ஆகையால் இந்த வசனத்தின் முற்பகுதியில் இழப்பாகக் கூறப்பட்ட விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த ஆணுக்கும் பௌதீகமான தந்தை இல்லை என்பதாகும். அந்த இழப்பை சரி செய்வதற்கு லாகின் (ஆனால்) என்ற பதம் பயன்படுத்தப்பட்டு, பெருமானார் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியா ஆவார்கள் என்ற வகையில் அந்த இழப்பு சரி செய்யப்பட்டுள்ளது.

அதன் பொருள், அன்னாருக்குப் பிறகு நேரடியாக (கிடைக்கும்) நுபுவ்வத்தின் அருள் துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது தமது செயல்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறார் என்ற முத்திரையைக் கொண்டவருக்கே இப்போது நுபுவ்வத் எனும் மேன்மை கிடைக்கும். இவ்வாறான முறையில் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகனும் வாரிசுமாக இருப்பார்.

சுருக்கமாக, இவ்வசனத்தில் ஒரு விதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தந்தையாக இருப்பது மறுக்கப்பட்டுள்ளது. மறுபுறம் தந்தையாக இருப்பது நிரூபிக்கவும் பட்டுள்ளது.

اِنَّ شَانِئَكَ هُوَالْاَبْتَرُ (108: 4)

என்ற வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேபனை அகற்றப்படுவதற்காக இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இந்த வசனத்திலிருந்து நாம் பெறும் கருத்தாவது, நுபுவ்வத், ஷரீஅத் இல்லாமல் இருக்க வேண்டும். நேரடியாக நபித்துவ தகுதியைப் பெறுவது என்ற வகையில் நுபுவ்வத் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த நுபுவ்வத் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் ஒளியிலிருந்து பயனடைந்தவாறு மலர்வதில் தடையில்லை. அதாவது, எத்தகைய சிறப்பைப் பெற்றவர் (வரலாம்) எனில், ஒரு புறம் உம்மத்தியாக இருந்து, மறுபுறம் முஹம்மதிய்ய ஒளிகளிலிருந்து பயனடைவதனால், நபித்துவத்தின் மேன்மைகளையும் தமக்குள் கொண்டிருப்பார்.

உம்மத்தில் தகுதிவாய்ந்த ஆன்மாக்கள் முழுமையான அந்தஸ்தையும் அடையாது என்றால், நவூதுபில்லாஹ் இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரு வகையிலும் சந்ததியற்றவர்களாக ஆகி விடுவார்கள். பௌதீக சந்ததியும் இல்லை; ஆன்மீக சந்ததியும் இல்லை என்றாகிவிடும். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சந்ததி இல்லாதவர் என்று பெயர்

**வைக்கும் ஆச்சேபிப்பவர் உண்மையாளராகி விடுகிறார்.**

**இப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நேரடியாகக் கிடைக்கும் நுபுவ்வத்தின் வாசல் கியாமத் வரை அடைக்கப்பட்டிருக்கிறது.**④

---

**அடிக்குறிப்பு 4.** *சில அறைகுறை முல்லாக்கள் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் '**உங்களில் முப்பது தஜ்ஜால்கள் வருவார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் நுபுவ்வத் வாதம் புரிவார் என்று நற்செய்தி தந்துள்ளார்கள்**' என்று நம்மீது ஆட்சேபனை செய்தவாறு கூறுகின்றனர்.*

*அதற்கு பதில் என்னவென்றால், அறிவற்றவர்களே! பேறிழந்தவர்களே! உங்கள் பங்கில் முப்பது தஜ்ஜால்கள் (வருவது) தான் எழுதப்பட்டுள்ளதா? **14** ஆம் நூற்றாண்டின் ஐந்தில் ஒரு பங்கும் கழியவிருக்கிறது. கிலாஃபத்தின் சந்திரன் தனது முழுமையின் **14** படித்தரங்களை நிறைவு செய்து விட்டது.*

**وَالْقَمَرَ قَدَّرْنٰهُ مَنَازِلَ (36:40)**

*என்ற வசனம் இதன் பக்கம் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் உலகம் முடிவடைய உள்ளது. ஆனால் உங்களின் தஜ்ஜால்கள் முடியப்போவதில்லை. உங்கள் மரணம் வரை உங்களுடனே இருப்பார்கள் போலும். அறிவற்றவர்களே! ஷய்த்தான் என்று அழைக்கப்படுகிற அந்த தஜ்ஜால் உங்களுக்குள்ளேயே தான் இருக்கின்றான். எனவே தான் நீங்கள் நேரத்தை அடையாளம் கண்டு கொள்வதில்லை. வானத்து அடையாளங்களைப் பார்ப்பதில்லை. எனவே உங்கள் மீது அந்தோ பரிதாபம்! அவரும் கூட என்னைப் போன்றே மூஸாவிற்கு **14** நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தான் வெளிப்பட்டார். அவருக்கும் தீய யூதர்கள் தஜ்ஜால் என்று தான் பெயர் வைத்தார்கள்.* فالقلوب تشابهت اللّٰهم ارحم

ஒருவர் உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பதன் உண்மை நிலையைத் தன்னிடம் கொள்ளாத வரை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அடிமையாக இல்லாத வரை, அவர் எவ்வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தோன்ற முடியாது.

இந்நிலையில், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்திலிருந்து இறக்குவதும், அவர்களை உம்மத்தைச் சார்ந்தவர் என்றும் அவர்களது நுபுவ்வத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பெறப்பட்டதாகவும் அதிலிருந்து பயன் பெற்றதாகவும் இருக்கும் என்று கூறுவதும் எந்த அளவுக்கு செயற்கையானதும் சிரமம் மேற்கொள்வதும் ஆக இருக்கிறது! எவர் ஒருவர் ஏற்கனவே நபியாக ஆக்கப்பட்டுள்ளாரோ அவரைப் பற்றி, அவரது நுபுவ்வத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பயன் பெற்றது என்று கூறுவது எப்படிச் சரியாக இருக்க முடியும்?

மேலும் அவரது நுபுவ்வத் முஹம்மதிய்ய நுபுவ்வத் எனும் விளக்கிலிருந்து பயன்பெற்றது இல்லை எனில், பிறகு எந்தப் பொருளில் அவர் உம்மத்தைச் சார்ந்தவர் என்று கூறப்படுவார். ஒருவரது ஒவ்வோர் உயர்வும் அந்த நபியைப் பின்பற்றியதன் மூலம் அவருக்குக் கிடைக்காத வரை, உம்மத்தைச் சார்ந்தவர் என்ற பொருள் எவருக்கும் பொருந்தி வர முடியாது என்பது வெளிப்படையாகும்.

பிறகு ஒருவர் நபி என்று அழைக்கப்படும் அளவிற்கு உயர்வைத் தானாகவே கொண்டுள்ளார் எனும் போது, பிறகு அவர் எவ்வாறு உம்மத்தைச் சார்ந்தவராக ஆனார்? மாறாக, அவரோ நேரடியாக நியமிக்கப்பட்ட நபியாக இருப்பார். அவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு கால் பதிக்க இடமில்லை. ஒருவேளை, அவரிடம் இருந்த முந்தைய நேரடி நுபுவ்வத் அகற்றப்படும்; வசனத்தின் பொருள்படி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலினால் இப்போது அவருக்கு முதலிலிருந்து புதிய நுபுவ்வத் கிடைக்கும் என்று கூறுவீர்களாயின், இந்நிலையில், உம்மத்துகளில் எல்லாம் சிறந்ததாக அழைக்கப்படுகின்ற இந்த ஓர் உம்மத்தே, அதிலிருந்து ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றி இந்த சாத்தியப்பட்ட தகுதி வரை அடைவதற்கு உரிமை கொண்டுள்ளது.

மேலும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களை வானத்திலிருந்து இறக்க வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. ஏனெனில் உம்மத்தைச் சார்ந்தவருக்கே முஹம்மதிய்ய ஒளிகளின் மூலம் நுபுவ்வத்தின் உயர்வு கிடைக்க முடியுமெனில், இந்நிலையில் எவரையும் வானத்திலிருந்து இறக்குவது அசல் உரிமையாளரின் உரிமையை வீணடிப்பதாகும். ஓர் உம்மத்தைச் சார்ந்தவருக்கு அருள் சென்றடையச் செய்வதைத் தடுப்பவர் யார்? இவ்வாறு, முஹம்மதிய்ய அருளின் முன்மாதிரியின் மீது

எவருக்கும் சந்தேகம் உருவாகக் கூடாது. ஏனெனில் ஒரு நபியை நபியாக்குவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

உதாரணமாக, ஒரு மனிதர், நான் தங்கம் தயாரிப்பேன் என்று கூறுகிறார். மேலும் தங்கத்தின் மீதே ஒரு சேர்மத்தைப் போட்டு இதோ! தங்கம் எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார். இதனால், அவர் தங்கம் செய்பவர் என்பது நிரூபணமாக முடியுமா?

ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் என்ற கடின உழைப்பின் மூலம், உம்மத்தைச் சார்ந்தவரிடம் அந்தத் தரம் உருவாகுவதில் தான் அன்னாருடைய அருள்களின் மேன்மை இருக்கிறது. அதுவன்றி முதலிலேயே நபி என்று உறுதி செய்யப்பட்ட ஒரு நபியை உம்மத்தியாக்குவதும், பிறகு அவருக்குக் கிடைக்கப்பெற்ற நுபுவ்வத் அந்தஸ்து தானாகவே கிடைக்கவில்லை; உம்மத்தியாக இருப்பதன் காரணத்தினால் கிடைத்ததாகும் எனக் கருதுவதும் எவ்வளவு பெரிய பொய்யும் ஏமாற்றுதலும் ஆகும்.

இன்னும் சொல்வதாயின் இந்த இரண்டு உண்மைகளும் முரண்பாடு உடையவையாகும். ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) உடைய நுபுவ்வத்தின் உண்மை நிலையானது அது நேரடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் அவர்களுக்குக் கிடைத்தது என்பதாகும். **இமாமுக்கும் மின்கும்**[5]

---

**அடிக்குறிப்பு 5.** *புகாரி, கிதாபுல் அஹாதீஸில் அன்பியா, பாபு நுஸூலு ஈஸப்னி மர்யம அலைஹிஸ்ஸலாம்*

*- வெளியீட்டாளர்*

‘அவர் உங்களிலிருந்தே உங்களுக்கு இமாமாக இருப்பார்’ என்ற ஹதீஸிலிருந்து தெரியவருவது போன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உம்மத்தி ஆக்கப்பட்டால் அதன் பொருள் இவ்வாறாகும்:

‘அவர்களின் ஒவ்வொரு மேன்மையும் முஹம்மதிய்ய நுபுவ்வத்திலிருந்து அவர்களுக்கு அருளப்பட்டதாகும்.’

அவர்களது நுபுவ்வத்தின் மேன்மை முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து அருள் பெற்றதில்லை என்று இப்போது நாம் ஏற்றுக் கொண்டு விட்டோம். இந்த இரண்டு முரணான விஷயங்களை இணைப்பது முற்றிலும் அபாண்டமாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உம்மத்தி என்று அழைக்கப்படுவார்கள்தான்; ஆனால், முஹம்மதிய்ய நுபுவ்வத்திலிருந்து அவர்கள் சிறிதும் அருள் பெறமாட்டார்கள் என்று கூறினால், இந்நிலையில் உம்மத்தியாக இருக்கும் உண்மை நிலை அவர்களிடமிருந்து மாயமாக போய் விடும்.

ஏனெனில் இப்போது நாம் குறிப்பிட்டு வந்தது போன்று, உம்மத்தி என்பதற்குத் தமது எல்லா மேன்மைகளையும் பின்பற்றுதல் மூலம் பெற்றவர் என்பதைத் தவிர வேறு பொருள் இல்லை. திருக்குர்ஆனில் ஆங்காங்கே இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தான் பின்பற்றுகின்ற அந்த நபியிடமிருந்து அருளைப் பெறுகின்ற இந்த வாசல் ஓர் உம்மத்திக்காக திறந்திருக்கும் நிலையில், ஒரு செயற்கைத்தனமான வழியை

கைக்கொள்வதும் முரண்பட்ட இரு விஷயங்கள் இணைவதை அனுமதிக்கப்பட்டதாக ஆக்குவதும் எந்த அளவுக்கு அறிவீனம்?

ஒருவர் எந்த மேன்மையையும் பின்பற்றுதலின் மூலம் பெறவில்லை என்றால், அவரை உம்மத்தி என்று எவ்வாறு கூற முடியும்?

இறை வஹீ வருவதாக வாதிப்பவருக்கு அவரது தாய் மொழியில் தான் வஹீ வர வேண்டுமே அன்றி, அரபியில் வரக்கூடாது என்ற சில அறிவற்றவர்களின் ஆட்சேபனையும் இவ்விடத்தில் அகற்றப்படுகிறது. ஏனெனில் ஒருவர் முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் விளக்கிலிருந்து பயன் பெறாமல் நிரந்தரமான நுபுவ்வத்துக்கான வாதம் செய்வார் என்றால், அவருக்கு அவரது தாய்மொழி(யில் வஹீ வருவது) அவசியம். ஆனால் ஓர் உம்மத்தி என்ற முறையில் ஒருவர், முஹம்மதிய்ய நுபுவ்வத்தின் அருளிலிருந்து சம்பாதித்த நுபுவ்வத்தின் ஒளிகளைப் பெறவும், இறை உரையாடலில் தமது பின்பற்றுதலுக்கு உரியவரின் (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்) மொழியில் வஹீயைப் பெறவும் செய்கின்றார். இவ்வாறு, பின்பற்றுபவருக்கும் பின்பற்றப்படுபவருக்கும், அவர்களுக்கிடையில் உள்ள பரஸ்பர தொடர்பைக் காட்டக்கூடிய ஓர் அடையாளம் இருக்கக்கூடும்.

அந்தோ பரிதாபம்! இந்த மக்கள் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீது ஒவ்வொரு வழியிலும் அநீதி இழைக்கிறார்கள். முதலில், சாபம் என்ற ஆட்சேபனையை அகற்றாமல்

அவர்களது உடலை வானத்தில் ஏற்றுகிறார்கள். இதனால் யூதர்களின் அசல் ஆட்சேபனை அன்னார் மீது அப்படியே இருக்கிறது.

இரண்டாவது, திருக்குர்ஆனில் அவர்களது மரணம் பற்றி எங்கும் குறிப்பிடப்படவில்லை என்று கூறுகின்றனர். ஒருவகையில், அன்னாரது இறைத் தன்மைக்கு ஒரு காரணத்தை உருவாக்குகின்றனர்.

மூன்றவாவது, தோல்வியுற்ற நிலையில், அவர்களை வானத்திற்கு இழுக்கின்றனர். எந்த நபிக்கு 12 சீடர்கள் கூட இப்போது பூமியில் இல்லையோ, எவர்களது பிரச்சாரம் முழுமை அடையவில்லையோ அவர்களை வானத்திற்கு இழுப்பது அவர்களுக்கு ஒரு நரகமாகும். ஏனெனில் அவர்களது ஆன்மா பிரச்சாரத்தை முழுமைப்படுத்த விரும்புகின்றது. மேலும் அவர்களது விருப்பத்திற்கு எதிராக அவர்கள் வானத்தில் அமர்த்தப்படுகிறார்கள்.

என்னைப் பொருத்தவரை, எனது பணி முடிவடையாமல் உயிருடன் வானத்திற்குத் தூக்கப்பட்டால், ஏழாம் வானத்திற்கே கொண்டு செல்லப்பட்டாலும் சரி! அதில் நான் மகிழ்ச்சியடைய மாட்டேன். ஏனெனில் எனது பணி குறைவுடையதாக இருக்கும் போது எனக்கு என்ன மகிழ்ச்சி இருக்க முடியும்?

அதேபோன்று அன்னாருக்கும் வானத்திற்கு செல்வதில் எந்த மகிழ்ச்சியும் இல்லை. அவர்கள் மறைமுகமாக ஒரு ஹிஜ்ரத் செய்திருந்தார்கள்.

அதனை அறிவற்றவர்கள் வானம் என்று கருதி விட்டார்கள்.

இறைவன் நேர்வழி காட்டுவானாக! நேர்வழியைப் பின்பற்றுபவர்கள் மீது அமைதி உண்டாவதாக!

**மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ**
**27 நவம்பர் 1902**